# Siddhargal Thiruvadi e-Newsletter

"SERVICE TO SOUL is SERVICE TO GOD"

*(This is a spiritual bi-monthly private circulation, not for sale and completely free of cost )*

**Issue : 03 : 2024**
**APRIL 16 - 30, 2024**

Regd No. 117/2023 under Indian Trusts Act, 1882, Indian Income Tax Act, 1977 and NGO Darpan No. TN/2023/037227



24-A, 1st Main Road, Tropical Avenue, Vedhachalam St, Ragavendhra Nagar, Pallikaranai, Chennai—600100


## இந்த இதழில்...


- பாவங்களைப் போக்கும் "பாட்டி சித்தர்"
- வாழும் சித்தர் - கோட்டா ராணி மாதாஜி
- சித்தர் பாடல் - திருமூலர்
- மகான் ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள் - வாழ்க்கைச் சரிதம்
- ஏப்ரல் (16-30) மாத குருபூஜை தகவல்கள்
- இந்த மாத அறக்கட்டளை அன்னதான - வள்ளல்கள்



Editor
Siddhargal Thiruvadi "Gunnu"
Co-Editor
S. SuryaNarayanan
Contact Mobile
+91 8438238921
E-mail
siddhargalthiruvadisevatrust@gmail.com
Website
www.siddhargalthiruvadi.com




## பாவங்களைப் போக்கும் பகவான் ஸ்ரீ பாட்டி சித்தர்

### யாரெல்லாம் சித்தர்கள்?

பல நூற்றாண்டுகளை வென்ற இலக்கியங்களில் பதினெட்டு (பதினெண் கீழ்) சித்தர்களைப் பற்றி நாம் அறிந்துள்ளோம். ஆனால் இந்த கலியுகத்தில் வாழ்ந்த சித்தர்களையும், வாழ்கின்ற சித்தர்களையும் அறிய மற்றும் உணர நாம் முற்பிறவில் பல புண்ணியங்களை செய்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

தமிழில் "சித்தி" என்பது ஆன்மீக சக்திகளை அடைந்த ஒரு முழுமையான நபர் என்று அர்த்தம். மேலும் சித்தர்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம், வானியல், நுண்கலைகள், மருத்துவம் ஆகியவற்றில் பேராற்றல் மிக்கவர்களாக திகழ்ந்தார்கள்.

தமிழர் பாரம்பரியத்தில் "சித்தர்" என்ற சொல் அறிவார்ந்த மக்களையே குறிக்கிறது. சமஸ்கிருதத்தில் சித்தா என்றும், தமிழ் மொழியில் சித்தர் என்றும் முழுமை அடைந்த அல்லது உணரப்பட்ட துறவிகளை பல தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பகவான் ஸ்ரீ பாட்டி சித்தர்

அவ்வாறு, கலியுகத்தில் வாழ்ந்த நம் பகவான் ஸ்ரீ பாட்டி சித்தரைப் பற்றி அறிந்து கொள்வோம். நமது பாட்டி சித்தர் பிரபஞ்ச பேராற்றலாக தெரிந்தமைக்கு ஒரு நுண்ணிய சான்று என்னவெனில் அவர்கள் 150 வயது வரை வாழ்ந்தது தான்.

நம் பாட்டி சித்தரின் பிறப்பு மற்றும் வளர்ப்பு பற்றி தகவல் ஏதும் அறியப்படவில்லை. அவர்கள் 20 வருடங்கள் மோகனூரில் உள்ள சுண்டக்கா செல்லாண்டி அம்மன் கோயிலிலும் மற்றும் சில நாட்கள் நாவலடியான்



தான்தோன்றிமலை பகவான் ஸ்ரீ பாட்டி சித்தர்

கோவிலிலும் தவம் செய்தார்கள் என்று தெரியவருகிறது. அப்போது அவர் மிகவும் எளிமையாகவும், இயற்கையோடும் ஒன்றி வாழ்ந்தார்கள். பாட்டி சித்தரை உணர்ந்தவர்கள் வெகு சிலரே!. பின்பு கொடுமுடியைச் சேர்ந்த டாக்டர் நடராஜன் அவர்கள் அக்கோவிலுக்கு போகும் போது பாட்டி சித்தரை உணர்ந்து அவருக்கு தீவிர பக்தர் ஆனார்.

## கர்ம வினையை வேறருக்கும் யுக்தி

ஒரு நாள் பாட்டி தனது பக்தரின் கால்களை காப்பாற்றும் நோக்கில் அவர் தனது கால்மாட்டு கீழ் வைத்து தானே முறித்து கொண்டார். இவ்வாறு மக்கள் கர்ம வினைகளை போக்கவும், ஏற்கவும் சித்தர்கள் என்றும் தயங்கியதில்லை. இப்படிப்பட்ட தனித்துவமும் மரபு மீறியப்போக்கும் சித்தர்களின் வரை விலக்கணம்.

தன் கால்களை முறித்துக் கொண்ட பாட்டி சித்தர் அக்கோவிலின் வாசலில் தன்னை வருத்திக் கொண்டதைக்கண்டு, பல தீவிர பக்தர்கள் அவர்களின் சேமம் வேண்டி நின்றனர். அப்போது பாட்டி பக்தர்களின் விருப்பத்திற்கு ஏற்ப 2009 ஆம் ஆண்டில் கொடுமுடி அருகே நொய்யலில் உள்ள மருத்துவர் நடராஜன் தோட்டத்திற்குச் செல்ல சம்மதித்தார்.

பின்பு 2015 ஆம் ஆண்டு வரை அங்கு தங்கி பல ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார். பல பக்தர்கள் வந்து அவர்களின் வழக்கத்தின்படியே பாட்டியை கண்டும் கொண்டாடியும் மகிழ்ந்தனர். யாருடைய தனிப்பட்ட சமயத்தையோ, சமய நூலையோ, சடங்குகளையோ சார்ந்து இருப்பதில்லை, அறிய சக்திகளை கைவரப்பெற்ற சித்தர்கள்...!

## 88 நம்பர் காரி பாட்டி சித்தர்

பல சமயங்களில் பாட்டி தனது வார்த்தைகளை பரிபாஷையில் கூறுவார். அவ்வாறு அவர்கள் கூறியதில், தன்னை 88 நம்பர்க் காரி என்று குறிப்பிடுவார்கள். 88 என்ற நம்பர் பெரும் வெற்றி மற்றும் செழிப்பு என்ற வாக்கியத்தின் அடையாளமாகும்.

பக்தர்களின் குறைகளையும், கரும வினைகளையும் பாட்டி தினந்தோறும் போக்கினார். எண்ணில் அடங்காத பல அற்புதங்களை அவர் நிகழ்த்தினார். குழந்தை வரம், தொழில் முன்னேற்றம், உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை போன்றவற்றை அவர்களின் பிரபஞ்ச பேராற்றலாக திகழ்ந்து அற்புதத்தை நல்கினார்.

பக்தர்களின் விருப்பத்தையும், அன்பையும் பாட்டி மனதார ஏற்றுக் கொண்டார். அந்தத் தோட்டத்தில் மனிதர்கள் மட்டுமல்லாமல் பறவைகள் மற்றும் விலங்குகள் கூட பாட்டியின் ஆசீர்வாதத்தை பெற்றன.

"உற்சாகமான மற்றும் நேர்மறையான ஆற்றலைத் தழுவி உங்கள் வழியில் வரும் ஆசீர்வாதங்களுக்கும், வாய்ப்புகளுக்கும் திறந்திருங்கள்" என்பது தான் அந்த 88 எண்ணின் உள்ளார்ந்த அர்த்தம். அப்படி பாட்டியிடம் இருந்து வரும் நேர்மையான ஆற்றலைப் பெற நம் மனம் சிற்றின்பத்தை விடுத்து பேரின்பத்தை அடைய திறந்திருக்க வேண்டும் என்பது பாட்டியின் பரிபாஷையினால் நமக்கு உணர்த்துகிறார்.




தான்தோன்றிமலை பகவான் ஸ்ரீ பாட்டி சித்தர் - 88 நம்பர்காரி

## மகா சமாதி

2015 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில், நம் பகவான் ஸ்ரீ பாட்டி சித்தர் அவர்கள் ஜோதியானார். அவர்களது மகா சமாதி, கரூரில் உள்ள தான்தோன்றிமலை அருகில் உள்ளது.




எப்பொழுதும் பாட்டி சித்தர் தன்னை பெருமாள் என்றும், தன்னை ஜோதியான வடிவத்தில் காளியாகவும் மாறுவேன் என்றும் கூறியுள்ளார்.

அதனால் தான் தான்தோன்றிமலை அருகில் பெருமாளின் மாதமான புரட்டாசி மாதம் ஜோதி ஆகியுள்ளார். தன்னை காளி என்று குறிப்பதற்காகவே சிவ பெருமானின் நட்சத்திரமான திருவாதிரை நட்சத்திரத்தில் ஐக்கியமாகியுள்ளார். அவர்களின் அற்புதங்களை கூற மனித சக்தியால் இயலாது.

நம் பாட்டி சித்தர் ஜோதியான பிறகும் அவரின் உருவத்தை ஜோதியாகவும், தெய்வத்தின் சிலைகளிலும் காட்சி கொடுத்து உள்ளார். நம் பாட்டி சித்தர் உடம்பில் அடக்கி வைக்கும் ஆத்மா அல்ல. பிரபஞ்சத்தில் திகழும் பரமாத்மா என்பதற்கு பல அற்புதங்களும், நிகழ்வுகளுமே சாட்சிகள்.

***மகாசமாதி முகவரி***:
அமைதி பூங்கா (மயானம்),
தான்தோன்றிமலை கிராமம்,
கரூர் மாவட்டம்.

**திருமதி . மேனகா நீதிவாசகன் , கோவை**

**(Courtesy: Shri. Sampath Kumar, Divotee, Paatti Siddhar)**

**கடந்த மாதம் அறக்கட்டளைக்கு சாலையோர ஆதரவற்றவர்களின் அன்னதானத்திற்காக நன்கொடை தந்த நல்லுள்ளங்களின் விபரம்:**

| நன்கொடையாளர் பெயர் | ஊர் |
|---|---|
| திரு. நாராயணன் | அரக்கோணம் |
| திரு. விஸ்வநாதன் | வேளச்சேரி சென்னை |
| திரு. இளவழகன் ராஜேந்திரன் | சென்னை |
| திரு. விஸ்வநாதன் கிருஷ்ணமூர்த்தி | அடையார் சென்னை |
| திருமதி. கவிதா டி எஸ் | பொள்ளாச்சி |

**சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக வாராந்திர அன்னதானம் சாலையோரத்தில் வாழும் ஆதரவற்ற ஏழைகளின் பசி தீர்க்க நீங்களும் நன்கொடை தாருங்கள்... எழைகளுக்கு அன்னதானம் அளித்து கர்ம வினைகளிலிருந்து விடுபடுங்கள்.**

## வாழும் சித்தர் கோட்டா ராணி மாதாஜி

திருச்சிராப்பள்ளியில் இருந்து சுமார் பத்து கிலோமீட்டர் தொலைவில் இருப்பது ஸ்ரீரங்கம். அதன் அருகே "யாத்ரி நிவாஸ்" என்கிற இடத்திலிருந்து சுமார் அரை கிலோமீட்டர் தூரத்தில், நால்வர் ஜீயர் சமாதி உள்ளது. அங்கு சென்றால் நீங்கள் வாழும் பெண் சித்தர் கோட்டா ராணி மாதாஜி அவர்களை தரிசனம் செய்யலாம். அவர்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளில் சரளமாக பேசக் கூடியவர்.

அவர் மற்ற சித்தர்களைப் போல் அல்லாமல் அனைவர்களிடமும் சகஜமாகவும் பேசக் கூடியவர். உங்களது குறைகளையும், கஷ்டங்களையும் அவர் களிடம் சொன்னால் அவர் உங்களுக்காக பிரார்த்தனை செய்வார்.

உங்களை ஆசீர்வதித்ததன் அடையாள மாக உங்களுக்கு ஒரு தயிர் பாக்கெட் தருவார். அந்த தயிர் பாக்கெட் உங்களுடைய முன் ஜென்ம கர்மாக்களின் வீரியத்தை குறைக்க வல்லது. அதனை நீங்கள் பிரசாதமாகப் பெற்று வரலாம்.

பெரும்பாலும் அவர்கள் காவிரி கரையில் நீராடி வருவதால், நால்வர் ஜீயர் சமாதியில் நீங்கள் காத்திருந்து அவரை சந்தித்து அருள் பெறலாம்.




முகவரி:

நால்வர் ஜீயர் சமாதி,
யாத்ரா நிவாஸ் அருகில்,
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

## சித்தர் பாடல்

**"காலை இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டலம் உண்டால்
வெறுத்தணும் பாலனாமே".**

**- திருமூலர்**

காலை வெறும் வயிற்றில் இஞ்சி, நண்பகலில் சுக்கு, இரவில் கடுக்காய் என தொடர்ந்து ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள் சாப்பிட்டு வர, கிழவனும் குமரன் ஆகலாம் என்பதே இந்தப் பாடலின் உட்கருத்தாகும்.

எனவே, தொடர்ந்து கடுக்காயை மேற்கூறியபடி சாப்பிட்டு வர நோய்கள் நீங்கி இளமையோடு வாழலாம். கடுக்காய் வீடுகளில் கண்டிப்பாக இருக்க வேண்டிய பொக்கிஷமாகும். ஆரோக்கிய வாழ்விற்கு சித்தர்கள் சொன்ன நாட்டு வைத்தியம், நாம் அனைவருக்கும் அவசியமாகும்.

### கடுக்காய்

நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான் நோய் தோன்றுகிறது. உஷ்ணக் காற்றினால் வாத நோய்களும், கப நோய்களும் உண்டாகின்றன. அந்த தேகத்தை நீட்டித்து ஆயுளை விருத்தி செய்ய திருமூலர் எளிய வழி ஒன்றைக் கூறுகிறார்.

உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை, கடுக்காய்க்கு உண்டு என்கிறார் திருமூலர். கடுக்காய்க்கு 'அமுதம்' என்று மற்றொரு பெயரும் உண்டு. பாற்கடலை கடைந்த போது தோன்றிய அமிர்தத்துக்கு ஒப்பானது கடுக்காயாகும். தாயை விட கடுக்காய் ஒரு படி மேலானது என்பது சித்தர்கள் வாக்கு..!

கடுக்காய் வயிற்றில் உள்ள நச்சுக் கழிவுகளை எல்லாம் வெளியே அகற்றும். நமது உடம்புக்கு அறுசுவைகளும் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும், கூடினாலும் நோய் வரும். அன்றாடம் நமது உணவில் கடுக்காயை சேர்த்து வந்தால் நமது உடம்புக்கு தேவையான துவர்ப்பை பெற்று வரலாம்.

கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு, இரவு உணவுக்குப் பின் வெந்நீரில் கலந்து குடித்து வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

### குணப்படுத்தும் நோய்கள்

கண்பார்வை கோளாறுகள், காது கேளாமை, சுவையின்மை, பித்த நோய்கள், வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், பைப்புண், குடற்புண், ஆணைப்புண், அக்கி, தேமல், படை, இதர தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைப்படுதல், மூத்திர குழாய்களில் உண்டாகும் புண்கள், மூத்திரப் பையில் எரிச்சல் மற்றும் அடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல், உள்மூலம், சீல்மூலம், ரத்தமூலம், பேதி, பௌத்திரக்கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக்கள் குறைபாடுகள் போன்ற அனைத்தையும் போக்கும் இறைவன் அருளிய அருமருந்து கடுக்காய்.

**ஏப்ரல் மாதம் (16-30), 2024 சித்தர்கள் குருபூஜை நாள் அட்டவணை**

| எண் | தேதி | சித்தரின் பெயர் | இடம் / முகவரி | குருபூஜை |
|---|---|---|---|---|
| 1 | 16.04.2024 சித்திரை -03 | **குழந்தைவேல் & முத்தையா ஸ்வாமிகள்** | மயிலாப்பூர், சென்னை | மகா குரு பூஜை |
| 2 | 16.04.2024 சித்திரை -03 | **சக்திவேல் ஐயா** | அள்ளிமேடு, காரனோடை | 4வது குரு பூஜை |
| 3 | 16.04.2024 சித்திரை -03 | **சொக்கையா சுவாமிகள்** | வாடிபட்டி , மதுரை | 85வது குருபூஜை |
| 4 | 17.04.2024 சித்திரை-04 | **விட்டோபானந்த சுவாமிகள்** | குப்பம், கிருஷ்ணகிரி | 33வது குருபூஜை |
| 5 | 17.04.2024 சித்திரை-04 | **ஆறுமுக சுவாமிகள்** | ஒட்டேரி, சென்னை | 111வது குருபூஜை |
| 6 | 21.04.2024 சித்திரை-08 | **வீர நாராயணபெருமாள்** | உலக்கூர் , விழுப்புரம் | 14வது குரு பூஜை |
| 7 | 23.04.2024 சித்திரை-10 | **அமிர்தலிங்க சுவாமிகள்** | கொசப்பேட்டை, வேலூர் | 254வது குருபூஜை |
| 8 | 25.04.2024 சித்திரை-12 | **தாண்டவராய சுவாமிகள்** | கோவர்தனகிரி, திருமால்பூர் | 139வது குரு பூஜை |
| 9 | 26.04.2024 சித்திரை-13 | **வேலம்மாள் சித்தர்** | சுருளிப்பட்டி, தேனி | 9வது குரு பூஜை |
| 10 | 30.04.2024 சித்திரை-17 | **கொங்கண சித்தர்** | ஊதியூர், காங்கேயம் | அவதார திருநாள் |

## ஸ்ரீலஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள்
### வாழ்க்கைச் சரிதம் ( பாகம் -1)



### பைரவ சித்தர்

அனைத்து மாமனிதர்களும் மிக குறுகிய காலமே நினைவு கொள்ளப்படுகிறார்கள். மேலும் அவர்கள் மறைந்த சில ஆண்டுகளில் முற்றிலும் மறக்கப்படு கிறார்கள். ஆனால் தவசீலர்களான ஞானிகள் என்றென்றும் மறக்கப் படுவதில்லை. 1949 இல் ஜீவசமாதி அடைந்த ஒரு மாபெரும் ஞான சித்தர் 60 ஆண்டுகளுக்கு பிறகு இன்றைய தலைமுறையினரின் முன் வெளிச்சத்துக்கு வருகிறார். இப்போது அனைத்து மக்களும் இவரைப் பற்றி அறிந்து, உணர்ந்து அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து வாழ்வில் மேன்மை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மகானின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது மகத்துவத்தையும் இங்கே சுருக்கமாக தொகுத்து வழங்குகிறோம்.

### இளமைப் பருவம்

பைரவ சித்தர் என்று அனைவராலும் அறியப்பட்ட மகான் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள். 1876 ஆம் வருடம் ஒன்பதாம் தேதி திரு கந்தசாமி – திருமதி அர்த்தநாரி தம்பதியின் மகனாக கோவை மாவட்டம் மஞ்சம்பாளையம் கிராமத்தில் அவ தரித்தார். வீர சைவ ஜங்கம வகுப்பைச் சேர்ந்த இவர் பெற்றோரின் பூர்வீகம் ஆந்திர மாநிலம். தாய்மொழி தெலுங்கு. இவர் இளம் வயதில் தனது பெற்றோரை இழந்தார். கர்நாடக மாநிலம் பெல்லாரி அருகே செல்லக்குருக்கி என்ற கிராமத்தில் எழுந்தருளியிருந்த மகான் ஸ்ரீ எரிதாதா சுவாமிகளிடம் சரணடைந்தார்.

### பாடகச்சேரி

கும்பகோணத்திற்கு தெற்கே, கும்பகோணம் - மன்னார்குடி சாலையில் வலங்கைமானுக்கு அப்பால் சுமார் நான்கு கிலோமீட்டர் தொலைவில் வெட்டாற்றங்கரையில் பாடகச்சேரி என்னும் அமைதியான எழில் மிகு கிராமம் உள்ளது. பஸ் நிறுத்தத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் பாடகச்சேரி கிராமத்திற்கு நடந்து செல்ல வேண்டும். இங்கு செல்ல பஸ் வசதி எதுவும் இல்லை.

மகான் ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் ஆணைக்கு ஏற்ப இளம் பருவத்தில் தென்னாடு நோக்கிப் புறப்பட்டு வந்த இவர் கும்பகோணத்தை அடுத்த கிராமங்களில் ஆடை ஏதுமின்றி திகம்பரராக அலைந்து திரிந்து வந்துள்ளார். இவர் நாச்சியார் கோவிலில் அவ்வாறு உலவி வந்தபோது அங்கிருந்த முகமதியர்கள் சிலர் இவரது நிர்வாண கோலம் கண்டு, இவரின் மகத்துவம் அறியாமல் வெறுப்புற்று துன்புறுத்த தொடங்கினர்.

### நவகண்ட யோகம்

ஒரு நாள் இரவு அங்குள்ள கிராம முன்சீப் அலுவலகத்தில் புகுந்து தாழிட்டுக் கொண்டார். கிராம அதிகாரி கதவை திறந்து பார்த்தபோது உடல், கை, கால்கள் தனித்தனியாக இருந்தன. இதைக்கண்டு முகமதியர்கள் இவரை கொலை செய்து விட்டதாக கருதிய கிராம அதிகாரி அவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய புறப்பட்டார். ஆனால் சிறிது நேரத்தில் இவர் முழு உருவத்துடன் வெளியே நடந்து வருவதை கண்டு அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தார். பின்னர் இவரது ஆற்றலும் மகத்துவமும் சுற்றுவட்டார கிராமங்களில் பரவத் தொடங்கியது. சில காலம் உன்மத்தராய் அலைந்து திரிந்து வந்த இவர் பாடகச்சேரியை அடுத்த பட்டம் என்னும் குக்கிராமத்தில் கிளாக்குடையார் என்ற பெருநிலக்கிழார் குடும்பத்தினரின் மாடுகளை மேய்க்கும் பணிகளில் ஈடுபட்டார். ஒரு நாள் மாட்டின் சொந்தக்காரர் ஒருவர் தனது மாட்டை தேடி மேய்ச்சல் நிலம் நோக்கி வந்த போது ஆள் அரவமற்ற மரத்தடியில் இவர் கை, கால்கள் தனித்தனியாக கிடந்த நிலையை கண்டு அதிர்ச்சி அடைந்து அஞ்சி நடுங்கி ஊராரிடம் தகவல் தெரிவித்தார். திரளாக சென்ற மக்கள் இவர் இயல்பாக மாடுகளை ஓட்டிக்கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்ததை பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

கிராம மக்கள் இது பற்றி சொல்லிக் கேட்டபோது தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதாரணமாக சொல்லிவிட்டார். இவர் அடிக்கடி தியான நிலையில் இருப்பதை கிராம மக்கள் கண்டார்கள்.

## மூலிகை மருத்துவம்

இவர் மாபெரும் சித்தர் என்பதை உணர்ந்து கொண்ட பாடகச்சேரியை சேர்ந்த பெரியோர்கள் தங்கள் கிராமத்தில் ஒரு கொட்டகை அமைத்து அதில் தங்கி இருக்கும் படி பணிவுடன் விண்ணப்பிக்க, இவர் பட்டம் எனும் குக் கிராமத்தில் இருந்து பாடகச்சேரி வந்து தங்களானார். இந்த காலகட்டத்தில் இவர் தியானம் செய்து தங்க பஸ்பம், செந்தூரம் மற்றும் பல மூலிகை மருந்துகள் தயாரித்து நோயாளிகளுக்கு கொடுத்து குணமாக்கி வந்துள்ளார்.

## குடந்தை கோவில் குடமுழுக்கு

இதன் மூலம் இவரது மகிமை பரவ ஆரம்பித்தது. வெகு தொலைவில் இருந்து காரைக்குடி, செட்டிநாடு பகுதிகளில் இருந்து நகரத்தார், பெருமக்கள் வந்து இவரை தரிசித்து நோய்களுக்கு மருந்தும் இதர துயரங்களுக்கு நிவாரணமும் பெற்றுச்சென்றனர்.

செட்டிநாட்டின் பெரும் செல்வந்தர் ஆதப்ப செட்டியாரின் தொழுநோய் முற்றிலும் நீங்கி அவரது கை விரல்கள் மீண்டும் வளர தொடங்கின, இது அற்புதச் செயலாகும். இப்பெரும் தனவந்தர், சுவாமிகளின் தீவிர பக்தராகி பாடகச்சேரியில் ஒரு மடம் கட்டிக் கொடுத்தார். பல ஆண்டுகளுக்குப் பின், 1925 ஆம் ஆண்டு வாக்கில் குடந்தை ஸ்ரீ நாகேஸ்வரன் கோவில் ஸ்ரீ நடராஜர் சன்னதி மண்டபத்தை அப்போதைய மதிப்பில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்து கட்டிக் கொடுத்தார். புதுப் பொலிவுடன் சிற்பக்கலை நயமாக திகழும் நடராஜர் சபையை இப்போதும் நாம் கண்டு மகிழலாம்.

ஏழை மக்களின் ஒருமித்த ஆதரவை பெற்று அவர்களின் இதயங்களை கொள்ளை கொண்ட சுவாமிகள், பெரும் செல்வந்தர்கள், வணிகர்களது இல்லங்களுக்கு சென்றும் இதர துன்பங்களுக்கு நிவாரணம் அளித்தும் அவர்களின் இதயங்களிலும் குடிகொள்ள ஆரம்பித்தார். இவர் செல்லும், தங்கும், பார்வைப்படும் இடங்களும் செழித்து ஓங்கி வந்ததை மக்கள் உணர்ந்தார்கள். சுவாமிகளின் சொல்லுக்கு கட்டுப்பட்டும் அவரது கட்டளைகளை எதிர் நோக்கியும் பெரும் செல்வந்தர்கள் காத்திருந்தார்கள்.

## கொள்கையும் கோட்பாடும்

சுவாமிகள் ஆறு அடி உயர பருத்த கரிய திருமேனி உடையவர். அகண்ட நெற்றி, கூறிய கண்கள், தூய வெள்ளாடை அணிவார். விபூதி, சந்தனம், குங்குமம் தரித்திருப்பார் பல ஊர்களுக்கு சென்று வருவார். ஒரே நேரத்தில் இரு ஊர்களில் தென்பட்டிருக்கிறார். தனக்காக உணவு கேட்க மாட்டார் அவர் வரும்போது வீடுகளில் பக்தர்கள் உணவுடன் காத்திருப்பார்கள். ஒரு நாளைக்கு மூன்று உருண்டை கலவையான சாதம் மட்டும் தனது கைகளால் வாங்கி சாப்பிடுவார். சில காலம் சாப்பிடாமலேயே இருப்பார். வள்ளலாரிடம் தனது பன்னிரண்டாவது வயதில் ஞான உபதேசம் பெற்றுள்ளார்.

கும்பகோணம் கிருஷ்ணப்ப நாயக்கர் தெரு எண் 14, கோதண்டபாணி என்பவர் இல்லத்தில், 2020ஆம் ஆண்டு வாக்கில் சுமார் 10 ஆண்டுகள் தங்கியுள்ளார். இங்கு சுவாமிகள் பேசாமலேயே மௌனமாக அமர்ந்த நிலையில் தியானத்தில் இருந்துள்ளார். ஒருவேளை பால் மட்டும் அருந்தி வந்த இவர், பிறகு பேச தொடங்கி உணவை கையில் வாங்கி சாப்பிடலானார். மக்கள் தத்தம் குறைகளை கூறி முறையிடும்போது விபூதி வழங்குவார். நோய்கள் குணமாகும், குறைகள் அகலும். பைரவர்களுக்கு தொடர்ந்து உணவளித்து போற்றிப் பாதுகாத்து வந்தார். பைரவர்களுக்கும் இவருக்கும் ஒரு அமானுஷ்ய உறவு முறை இருந்திருக்கிறது.

சுவாமிகள் நிகழ்த்திய பலப் பல அற்புதங்களையும், அதிசயங்களையும் நாம் அடுத்த பதிவில் காண்போம்....

**(Courtesy: Shri. A.Elango,**
**Padagachery Ramalingaswamy Annadhana Trust)**

## அறக்கட்டளைக்கு நன்கொடை செய்ய

| | | |
|---|---|---|
| 1 வேளை உணவு | ரூ | 80.00 |
| 1 பாட்டில் தண்ணீர் | ரூ. | 20.00 |
| 1 லி பூஜை எண்ணெய் | ரூ. | 200.00 |
| 1 மாத அபிஷேகபொருள் | ரூ. | 500.00 |
| 1 செங்கல் | ரூ. | 30.00 |
| 1 மூட்டை சிமெண்ட் | ரூ. | 450.00 |

***"GOD HAS GIVEN YOU, PLENTY…..***
***SPEND YOUR EXCESS EARNINGS***
***TO GOD THROUGH ANNADHANAM"***

********

# விளம்பரங்கள்




சுருளிமலை அடிவாரம்
நித்ய ஜோதி நீலகண்ட ரிஷி
அவர்களின் தாயார்
தெய்வீக அருளாளர்
நித்ய ஜோதி
ஸ்ரீ வேலம்மாள் சித்தர்
9 ஆம் ஆண்டு
குருபூஜை விழா
நாள் : 26.04.2024 வெள்ளிக்கிழமை
(சித்திரை 13 ம் தேதி அனுஷ நட்சத்திரம் )
நிகழ்ச்சி நிரல்
மதியம் 12.00 மணி யாக பூஜை
மதியம் 12.15 மணி விளக்கு பூஜை
மதியம் 12.30 மணி சாதுக்கள் மகேஸ்வர பூஜை & மஹா அன்னதானம்
அழைப்பின் மகிழ்வில்....
நித்யஜோதி நீலகண்ட ரிஷி
அகில உலக சிவ நந்தீஸ்வரர் அறக்கட்டளை
பதிவு எண் : IV.40/2017
சுருளித்தீர்த்தம், சுருளிமலை அடிவாரம்,
சுருளிப்பட்டி (PO) தேனி மாவட்டம்.
7373732338




ஸ்ரீலஸ்ரீ சொக்கையா சுவாமிகள் மடம்
ஸ்ரீலஸ்ரீ சொக்கையா சுவாமிகள் அதிஷ்டானம்
வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
85 வது ஆண்டு குரு பூஜை (ஜெயந்தி)
பெருவிழா அழைப்பிதழ்
சித்திரை மாதம் 3ம் நாள் 16.04.2024 செவ்வாய்க்கிழமை
ஸ்ரீ லஸ்ரீ சொக்கையா சுவாமிகள்




உ
திருச்சிற்றம்பலம்
குருவருள் நாடின் !
திருவருள் சித்திக்கும் !
அருள்மிகு குழந்தைவேல் ஸ்வாமிகள்
அருள்மிகு முத்தையா ஸ்வாமிகள்
ஸ்ரீ குமார தேவர் மடம்
அருள்மிகு ஸ்ரீ குழந்தைவேல் ஸ்வாமிகள்
அருள்மிகு ஸ்ரீ முத்தையா ஸ்வாமிகள்
மகா குருபூஜை விழா
அழைப்பிதழ்
இடம் :
ஸ்ரீ குமாரதேவர் மடம் சித்தர்கள் பீடம்
16/2, சித்திர குளம் மேற்கு தெரு, மயிலை, சென்னை - 600 004.
நாள் : குரோதி வருடம், சித்திரை மாதம் 3ம் தேதி
(16-4-2024) செவ்வாய்கிழமைபூசம் நட்சத்திரம்

17.04.2024 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு உற்சவ மூர்த்திகள் திருவீதி உலா நடைபெறும்
அமரர் பதியே
முருகா முருகா
தாதா ஆறுமுகனே
முருகா! முருகா!
வேலும் மயிலும் துணை
ஓம் தத்சத் - அமரர் கோட்டம் - ஓம் தா தாய நம!
சிவராம தா தா போத குருநாத லிங்கமூர்த்தி துணை
தாதா ஆறுமுகனே!
தாதா ஜெகஜோதி!
தாதா ஆறுமுகம்!
முருகா! முருகா!
சென்னை, பெரம்பூர், பேரக்ஸ், டீமலஸ் சாலை, நெ.173ல் (பழைய நெ.77)
திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ காசி சதாசிவரிஷி சீடர்
பரங்கிமாமலை ஆலந்தூர் ஸ்ரீகாசி வீரலஷ்மி ஸ்ரீசாந்தசம்சார
பரமானந்த தாதா ஸ்ரீகாசி சதாசிவ
ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள்
111 வது ஆண்டு மகாகுரு பூஜை மஹோற்சவப் பத்திரிகை
நக்ஷத்தரக் குறிப்பு - (வெண்பா)
ஆனந்த சாகரமார் ஆறுமுகன் ஆம்பெரியோன்
ஆனந்த மேடமதி ஆர்ந்த இரு - பானொன்றில்
ஆயிய முன் நவமி ஆதிவா ரந்தனிலே
போய்க்கலந்தான் பொற்சடையான் தான்
அன்புடையீர்,
ஸ்ரீ மத் அகண்டகார நித்திய நிரஞ்சன நிர்மல நிரலம்பப் பெருங்கருணை தடங்கலாகிய பரமசிவத்தின் அருள்மிகுந்தவராயும் ஆனந்த பதவி தரும் ஞானமூர்த்தியும் இல்லறத்தார்க் குற்ற இடுக்கண் அனைத்தையும் ஆதித்தன் முன் நில்லாத பனிபோல் நீங்கும் ஞானபாணுவாக விளங்கும் ஸ்ரீமத் ஆறுமுக சுவாமிகளுக்கு குரோதி ஆண்டு சித்திரை 4ந் தேதி 17.04.2024 புதன்கிழமை தினம் கூடிய சுபதினத்தில் காலை 8.00 மணிக்குமேல் சென்னை, சூளை, பட்டாளம், பெரம்பூர் பேரக்ஸ், டிமலஸ் சாலை, பழைய எண்.77, புதிய எண்.173 எண்ணில் திருக்கோயில் கொண்டிருக்கும் மேற்படி சுவாமிகளின் திரு உருவப் படத்திற்கும், கலசத்திற்கும் சோடசோபசார அலங்கார தூப தீப நைவேத்திய ஆராதனையும் சகலவித மங்களகரமான இன்னிசை வாத்தியங்களுடன் மஹாகாசியென வழங்கும் ஓட்டேரி மயான சேத்திரத்தில் ஆறுமுக சுவாமிகளின் ஆலயத் தெருவில் நிலைப் பெற்றோங்கியுள்ள ஸ்ரீ சமாதி ஆலயத்தில் மேற்படி சுவாமிகளுக்கு அபிஷேக அலங்கார சோடசோபசார நைவேத்திய தூப தீப ஆராதனையும் மேற்படி திருக்கோயில் அன்று மாலை 6 மணிக்குமேல் பல பெரியோர்களால் அருள்மொழி விளக்கமும் சத்கதா காலசேஷபமும் இரவு 8 மணிக்குமேல் சகல தவ பத்வதயும் அனுபவித்து ஆனந்த கடல் மூழ்கி இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று உய்யுமாறு எல்லாம் வல்ல சிவராம தாதா திருவருளை வேண்டுகிறோம்.
அன்புள்ள,
ஸ்ரீ தாதா காசி சதாசிவ ஆறுமுக சுவாமிகளின்
ஆலய முன்னேற்றகுழுவினர்
குரோதி ஆண்டு சித்திரை 4ந் தேதி 17.4.2024 புதன்கிழமை 111வது ஆண்டு மகாகுரு பூஜை
குரோதி ஆண்டு ஆடி மாதம் 13ந் தேதி 29.7.2024 திங்கட்கிழமை ஆடிக்கிருத்திகை தினம்
குரோதி ஆண்டு புரட்டாசி 26ந் தேதி 12.10.2024 சனிக்கிழமை விஜயதசமி–திருவோணம்
குரோதி ஆண்டு மார்கழி 25ந் தேதி 5.1.2025 வியாழக்கிழமை தாதாவின்
212வது பிறந்ததின விழாவும் இரவு வீதி உலாவும் நடைபெறும்.
வம்சாவழியினர் தினசரி பூஜை செய்பவர் : தெய்வத்திரு.D.தன்ராஜ், D.சத்தீஸ்வரன் செல் : 9444235569
பத்திரிகை உபயம் : D.ராமநாதன் செல் : 9092248344

**Your small contribution can reduce your ancient KARMA**
**by DONATING to the TEMPLE construction**

**the proposed temple located Near by Kanchipuram in 2 Acres of land for**

# 18 SIDDHAR BEEDAM

## (with Maha Kundam)

**AND**

# GREAT SHIVA TEMPLE

**You can directly do your own pooja here**






**Your Donation Bank Account Details :**

## *Siddhargal Thiruvadi Seva Trust*

**S.B A/c. No. : 1200 0297 8817**

**IFSC Code : CNRB 000 2874, SWIFT No.: CNRBINBB**

**Canara Bank - NIOT Pallikaranai Branch, Chennai - 600100**

**Other Mode of Payments :**

**G-Pay / Paytm No. : (+91) 8438238921**

**( You can get Income Tax Relief of your DONATION under 80G )**

Edited and Published by:

**SIDDHARGAL THIRUVADI SEVA TRUST**